


# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம்

## தலைவாசல் ஊராட்சி ஒன்றியம்

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், வரகூர் ஊராட்சி, வரகூர் கிராமம், சர்வே.எண்கள்: 28/2A, 28/4B, 29/3E, 29/4E1 & 29/4E2B அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

கோப்பு எண் : SLM/ CIVHLDKE / 34620 / 2024
இணையதள விண்ணப்பம் எண் : CIVHLDKE
அளவுத் திட்டம் : 1:400

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்படப்பட்டுள்ளது.

குறிப்பு :

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 2.429 ஏக்கர் (அ) 9832.00 ச.மீ |
| கோரிய மனைகள் | : 41 |
| ஒதுக்கிய மனைகள் | : 41 |
| மனுதாரர் உபயோகம் | : 01 |

மனைப்பிரிவு சாலை (மூலை முடுக்கு உட்பட) பரப்பு: 2894.08 ச.மீ

மனைப்பிரிவு எல்லை ..........

நிலையிலுள்ள சாலை ..........

பொது ஒதுக்கீடுகள் (மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

மனைப்பிரிவு சாலை (மூலை முடுக்கு உட்பட) பரப்பு: 2894.08 ச.மீ

அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019-ன் படி பூங்கா ஒதுக்கீடு 10% பரப்பளவு இடத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி தொகையினை அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம்:

(TNCDBR 2019, 47(8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனைப்பரப்பு

உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட (PP1) பொது உபயோக மனைப்பரப்பு : 67.00 ச.மீ = 0.96%

TANGEDCO - க்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனைப்பரப்பு

TANGEDCO-க்கு ஒதுக்கப்பட்ட (PP2) பொது உபயோக மனைப்பரப்பு : 40.05 ச.மீ = 0.57%

மூலை முடுக்கு :

7.2மீ முதல் 12.0மீ வரையிலான அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MAI) நாள் 04.02.2019-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண் 16-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MAI) நாள் 31.01.2020-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா- தானபத்திரம் -பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
10. இம்மனைப்பிரிவிலிருந்து அருகிலுள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்ப்பிக்கபட்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்படல் வேண்டும்.
11. சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், சிறுவாச்சூர் அஞ்சல், சிறுவாச்சூர் கிராமம், அம்மன் நகர், க.எண்.6/1234, என்ற முகவரியில் வசித்துவரும் மனுதாரர் திரு.K.வேலுமணி என்பவரால் சமர்ப்பித்துள்ள உறுதிமொழி பத்திரம் எண்.28AC 456805 -ல், தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள தலைவாசல் வட்டம், வரகூர் ஊராட்சி, வரகூர் கிராமம், சர்வே.எண்கள்: 28/2A, 28/4B, 29/3E, 29/4E1 & 29/4E2B-ல் 2.43 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு கிழபுரம் உள்ள சர்வே.எண்: 28/2B-ல் அமையும் மனுதாரர் திரு.K.வேலுமணி என்பவரின் மகன் திரு.விஷ்வா என்பவருக்கு சொந்தமான நிலத்தில் வருங்காலங்களில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்கப்பட்டால் அதற்கு தகுந்த அரசாணையின் படி 10% பூங்கா நிலத்தினை ஒதுக்கி மற்றும் தற்பொழுது மனுதாரர் அமைக்கவுள்ள மனைப்பிரிவிற்கு ஒதுக்கபட வேண்டிய 10% பூங்கா நிலத்தினை சேர்த்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கிறேன் என்று உறுதி அளிக்கப்பட்டதற்கு இணங்க நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

**APPROVAL NO: SWP/DTCP/SALEM/LAYOUT NO : 81/2025**

பா.கிருபா
வரைவாளர்

ராகேஷ் ரவி
வரைவாளர் நிலை - III

பி.ஹரிஹர சுதன்
திட்ட உதவியாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம்.